செய்தி வெளியீடு எண்:520 நாள்:29.07.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (29.7.2021) தரமணியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் உள்ள முன்காண் திரையரங்கம், மறு ஒலிப்பதிவு திரையரங்கம் மற்றும் குளிரூட்டப்பட்ட படப்பிடிப்புத்தளம், மாணவர்களின் படப்பிடிப்புத்தளம், மாணவர் தங்கும் விடுதி, உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப் பயன் பிரிவு மற்றும் வளாகத்தில் அமைந்துள்ள ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், மறு ஒலிப்பதிவு திரையரங்கத்தில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படத்தினைப் பார்வையிட்டார்கள்.

பின்னர், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது, கடந்த 27.7.2021 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் ஆய்வுக்கூட்டத்தில், செய்தித்துறையில் பல்வேறு ஆக்கப்பூர்வமானப் பணிகளையும், தொலைநோக்குத் திட்டங்களையும் வகுக்கவேண்டும் எனவும், கள ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்கள்.

அதன் அடிப்படையில், செய்தித்துறையின் கட்டிப்பாட்டின்கீழ் இயங்கிவரும், எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆய்வு செய்யப்பட்டது. இந்நிறுவனத்தை மேலும் மேம்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்கள்.

மேலும், இந்த ஆய்வின்போது வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ஜே.எம்.எச். அசன் மௌலானா அவர்கள், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. மகேசன் காசிராஜன். இ.ஆ.ப., அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9